**செய்தி வெளியீடு எண்:718** **நாள்: 27.10.2017**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (27.10.2017) முதலமைச்சர் முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் நேரடி நியமனம் மூலம் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள 316 உதவி மருத்துவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 100 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

அரசு மருத்துவமனைகளில் ஏற்படும் காலிப் பணியிடங்கள் மற்றும் புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்களை உடனுக்குடன் நிரப்பி, அரசு மருத்துவ நிலையங்களுக்கு வரும் ஏழை எளிய மக்களுக்கு தங்குதடையின்றி மருத்துவ சேவை வழங்கப்பட வேண்டுமென்ற உயரிய நோக்கத்திற்காக, இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கென தனியாக மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் ஜனவரி 2012–இல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவக்கப்பட்டது. இவ்வாரியம் இதுவரை தேர்வு செய்துள்ள 10,093 மருத்துவர்கள் மற்றும் சிறப்பு மருத்துவர்கள், 9,190 செவிலியர்கள் மற்றும் இதர மருத்துவ பணியாளர்கள் உட்பட 22,358 பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் தற்போது 316 உதவி மருத்துவர்களை புதியதாக தேர்வு செய்துள்ளது. இவர்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று முதலமைச்சர் முகாம் அலுவலகத்தில் 100 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

அப்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ‘‘மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா இருக்கின்ற காலத்திலேயே தமிழகத்திலுள்ள அனைத்து கிராமங்களில் இருக்கும் பொதுமக்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தில் அதிகமாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டன. அதுமட்டுமல்ல, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் அம்மாவினுடைய ஆட்சியிலே ஆரம்ப சுகாதார நிலையம் உருவாக்கப்பட்டு, 30

படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தி ஆங்காங்கே இருக்கின்ற பொதுமக்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கக்கூடிய நிலையை அம்மாவினுடைய ஆட்சியில் காண முடிந்தது. அதற்குண்டான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா வழியிலே செயல்படும் அம்மாவினுடைய அரசும் 22,358 பணியிடங்கள் இதுவரை மருத்துவ பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக நிரப்பப்பட்டிருக்கின்றது. இன்றையதினம் 316 புதிய உதவி மருத்துவர்களை ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரிவதற்கு இன்றைக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் குறிப்பிட்டதைப் போல, தமிழகத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலி உதவி மருத்துவர்கள் இல்லை என்ற நிலை இப்பொழுது உருவாக்கப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு தமிழகத்திலே ஆரம்ப சுகாதார நிலையத்தில் அனைத்து மருத்துவமனையிலும், உதவி மருத்துவர் பணியிட காலியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டிருக்கின்றன. கிராமப்புற மக்களுக்குத் தேவையான உரிய சிகிச்சை அளிப்பதற்காக உதவி மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு, பல்வேறு மருத்துவர் பணியிடங்களெல்லாம் படிப்படியாக நிரப்பப்பட்டு வருகிறது. அதேபோல் உதவி மருத்துவர்களாக இன்றைக்கு பணி ஆணை பெற இருக்கின்ற சகோதர, சகோதரிகள் தங்களுடைய கடமைகளை உணர்ந்து மக்களுக்கு சேவை புரிய வேண்டும். ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வருகின்றவர்கள் ஏழை, எளிய மக்கள். ஆகவே, அப்படிப்பட்ட மக்களுக்கு இதமாக பேசி, உரிய சிகிச்சை அளித்து, அவர்களுக்கு பூரண குணமடைய செய்வதற்குண்டான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதுமட்டுமல்ல, தற்போது டெங்கு காய்ச்சல் படிப்படியாக குறைந்து கொண்டிருந்தாலும், ஆங்காங்கே இன்னும் ஒரு சில இடத்திலே இருப்பதாக தகவல் வருகின்றது. ஆகவே பணி ஆணை பெறுகின்ற உதவி மருத்துவர்கள் தங்கள் பகுதியிலே காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக ரத்த பரிசோதனை செய்து அதற்குண்டான சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். பணி நியமனம் பெறுகின்ற உதவி மருத்துவர்கள் பொதுமக்களுக்கு சிறந்த முறையில் சேவையாற்ற வேண்டும். ” என்று வாழ்த்தினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., இந்திய மருத்துவம் மற்றும்

ஓமியோபதித் துறை ஆணையர் / அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.மோகன் பியாரே, இ.ஆ.ப., தேசிய ஊரக நலவாழ்வு சங்கத்தின் குழும இயக்குநர் திரு.தாரேஸ் அஹமது, இ.ஆ.ப., தமிழ்நாடு மருத்துவ சேவைக்கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் உமாநாத், இ.ஆ.ப., மருத்துவப் பணியாளர் தேர்வு வாரிய தலைவர் திரு. வே.ராஜாராமன், இ.ஆ.ப., தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் திருமதி உமா மகேஸ்வரி, இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் அ. எட்வின் ஜோ, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் டாக்டர் கு. குழந்தைசாமி, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் கூடுதல் இயக்குநர் (ஆய்வு) டாக்டர் பி. பானு, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் டாக்டர் எம்.ஆர். இன்பசேகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 27.10.2017**